1969 மார்ச் 12]

இன்றன. அதனால் ஏற்படக்கூடிய சில சங்கடங்களைப்பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால், சற்று காலதாமதம் ஆகலாமே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. இரண்டு அரசினரும் நல்ல பரிவுணர்ச்சியோடு இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கேரள முதலமைச்சர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிர்பாட் அவர்கள் இதில் ரொம்ப அக்கறை கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், பேச்சுவார்த்தைகள் நல்ல சுமுகமான முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. இது நல்ல வகையில் நடைபெற முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 300 வின.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம் திட்டத்தை (பல்லடம் வட்டம்) மங்கலம் கிராம பகுதி வரை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு அலுவல் சம்பந்தமாக அமைச்சருக்கு வேறு காரியம் இருப்பதால், 301, 302 எண்ணுள்ள கேள்விகள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

Standing passengers in mofussil buses

***303 *Q.*—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to allow standing passengers in mofussil buses in our State ?**

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : வெளியூர் பேரூந்துகளில் பயணிகள் நின்று கொண்டு போவதை அனுமதிப்பதற்கில்லை.

Thiru K. VINAYAKAM: Sir, whereas in the mofussil buses travelling by standing is hazardous to the safety of the passengers–evidently that is the stand taken by this Government–will this Government discourage this kind of travelling by standing in the City buses also because it involves a lot of accidents especially to old women or women or a large number of children who are prepared to travel by standing in the buses for want of seats ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் : நகரத்தில் ஓடும் பேரூந்துகளுக்கும் வெளியூர்களில் ஓடும் பேரூந்துக்களுக்கும் பெருத்த வேற்றுமைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, வெளியூர் பேரூந்துகள் நீண்ட தூரம் போகின்றன; வேகமாகவும் போகின்றன ; வெளியூர் போகும் பேரூந்துகளில் வெற்று இடம் (ஸ்டாண்டிங் ஸ்பேஸ்) குறைவு ; கூரையும் தாழ்வாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலவரங்கள் நகர பேரூந்துகளில் இல்லை. ஆதலால், பயணிகளின் வசதியை முன்னிட்டு, நகர பேரூந்துக்களில் அவர்கள் நின்று போக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

Thiru B. VENKATASWAMY : Sir, in the Mysore State they have provided for standing tickets in the mofussil buses also. In our State also there is a great demand for standing tickets in the mofussil buses. Will this Government come forward to allow the issue of at least 10 standing tickets in the mofussil buses also ?